உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கடகப்புராணம்

இஃது
கூறைநாடு
வீரசைவகுலதிலகர்
சாமிநாதஐயரவர்கள் குமாரர்
வித்வான்
**கனகசபாபதி ஐயரவர்கள்**
இயற்றியது.

---

சிதம்பரம்
சிவகதாப்பிரசன்னத்தாகரம்
ஸ்ரீ அப்பாக்கண்ணு ஓதுவாரவர்களால்
பார்வையிடப்பட்டு
பட கா
கணபதியாப்பிள்ளையவர்கள் குமாரர்
**சோமசுந்தரப்பிள்ளையவர்களால்**
சிதம்பரம்
ஸ்ரீலோகமாதாயந்திரசாலையிலும்
சண்முகசுந்தரவிலாசயந்திரசாலையிலும்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

---

சர்வஜித்து கார்த்திகைமீ.

# திருக்கடகப்புராணம்

## பாயிரம்.

### காப்பு.

வெள்ளைவாரணப்பிள்ளையார்.

மாமேவுமணிமார்பத்திருநெடுமாலயன்முதலாம்வானோர்யார்க்கும்
ஏமேவுஞானமுதருளென்னவெளித்திடவவ்வியல்புவாய்ந்த
ஆமேவுமதிநிதிதன்னபிதானத்துகிலாதிதூய்தாக்கொள்ளும்
பூமேவுகடகநகர்வாழ்வெள்ளைவாரணத்தைப்போற்றிவாழ்வாம் (௧)

எண்ணியமுடிக்குமவிநாயகர்.

புண்ணியமேபுரிதருவோர்புரிந்தவையாவையுமீண்டேபோதவாக
நண்ணியநதருள்புரியுங்கைலாயநாதருக்குநலமாரெண்ணத்
தெண்ணியபூரணமாக்கவுறளித்திடவெண்ணியமுடிப்பாரெனப்பேர்வாய்ந்து
கண்ணியமாகடகநகர்த்திருத்தளிமுன்றிற்களிற்றைக்கருதிவாழ்வாம். (௨)

கைலாயநாதர்.

சீர்பூத்தபிரணவத்தின்பொருடானேயெனத்தெரிந்துந்தெளிதராத
பேர்பூத்தவயனெடுமாலாதியர்க்குக்காட்டிவொண்பரிவுகூர்ந்து
நீர்பூத்தபொற்பவர்க்கேமைத்தினிதழியணிநிலவப்பூண்ட
வேர்பூத்தகடகநகர்க்கைலாயநாதனடியிணைதஞ்சிவாழ்வாம். (௩)

இதுவுமது.

வெயிலாயவவம்பாற்றிப்பசக்கடிருங்குணீழன்மேவிவாழ்வா
னயிலாயவறிவாசொலும்வேதபாடலசீழலமர்வுற்றோங்கு
மயிலாயவஞ்சாயற்கலியாணசுந்தரியாமாதோர்பக்கக்
கயிலாயநாதனிருகமலமலர்ச்சேவடிகள்கருதிவாழ்வாம். (௪)

கல்யாணசுந்தரி.

உலகமுதலைம்பூதமொளிர்தருவிண்மணிமதியமுயிர்க்கெனவை
நிலவுமிவற்றைக்கேற்றனிறைதருசின்மயன் [illegible]
குலவியமர்காரணியைக்கோத்திரமன்றனித்த [illegible]
கலவுமெழிற்கடகநகர்க்கல்லியாணசுந்தரியைக்கருத்துள்வைப்பாம். (௫)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பாற்கடன்மிசைபேவாழ்ந்தும்பராவருமமுதங்கொண்டு
மாற்கடல்கடக்கொணுதமாலவன்சமழ்ப்பின்மாழ்க்கச்
சேற்கடலெனும்வாவிப்பாற்செம்பொன்வள்ளப்பாலுண்ட
நூற்கடல்புகழுஞானப்பிள்ளைதாளுவன்றுவாழ்வாம். (௨0)

திருநாவுக்கரசுநாயனார்.

ஆலத்தினடர்க்கப்பட்டேயல்லகண்டத்தனுமி
நீலத்தினிறத்தனுனநெடுமாலுநெடுமோலாகச்
சீலத்திற்குறையாவாலந்தேக்குறப்புணவாக்கொண்டு
கோலத்திற்குறைவிலாதோன்குரைகழல்குறித்துவாழ்வாம். (௨௧)

சுந்தரமூர்த்திநாயனார்.

கடிமலைவிளிக்கச்சென்றுகராவைச்சக்கரத்தாற்கொன்று
வடமலையாதுகாத்ததிருமாலும்பெருமாலாகத்
தடமலைகராவைக்கூவித்தண்டமிழ்ப்பதிகமோதி
மடமலைதனையற்றந்தவள்ளலையுள்ளுவாமே. (௨௨)

மாணிக்கவாசகசுவாமிகள்.

அருந்தவன்மனுவென்றோதியருச்சனைபயிற்றவாய்ந்த
திருந்தியநலமென்றெண்ணுந்திருநெடுமாலோனுணைப்
பெருந்துறையண்ணலாரேபேரின்பம்பெரிதுஞ்செய்யக்
குருந்தடிநிழலிற்பெற்றோர்குரைகழல்குறித்துவாழ்வாம். (௨௩)

தண்டீசநாயனார்.

பொன்னையோ † ருந்தியுய்த்துப்போந்தொருகுளப்பாற்கொள்ள
முன்னைநாடோழற்கீந்தமுதல்வர்தஞ்செயல்போலோங்கன்
மின்னைநேரிடத்தன்னுரைவிழையருச்சனையின்பேற்றைத்
தன்னையேவினுவாகல்குந்தண்டீசற்சார்ந்துவாழ்வாம். (௨௪)

அறுபத்துமூவர்.

வேறு.

மாயனார்முன்மலர்க்கழல்காணுத்
தாயனார்தடுத்தாண்டதகைமைசா
றாயனார்திருத்தொண்டத்தொகையுள்வாழ்
நாயனார்களைநாளும்பணிகுவாம். (௨௫)

தீக்ஷாகுரு.

வேறு.

மலமொருமூன்றையுமாற்றுவித்துயர்
தலமிருமூன்றின்மேழ்ற்றுணர்ந்தரு
ளலமிகுபச்சைக்கந்தையசாமியைப்
பலமுறைநிலமிசைப்பணிந்துவாழ்குவாம். (௨௬)

---

† உந்தி - ஆறு.

வித்தியாகுரு.

மன்னியதிருசிராமலையின்மாதவந்
துன்னிவாழ்ந்தோங்குமீனாட்சிசுந்தர
நன்னிலைவைப்புயர்நலமின்னுந்தா
வென்னிதையதனிலிருக்குமென்றுமே. (உஎ)

மற்றையடியார்கள்.

வேறு.

என்னயஞ்செய்கைலாயநாதனைப்பொருமுப்போது
மின்னருண்மேனிதீண்டிவிராஅஞ்சிவத்துவிசரனூர்
மன்னுமத்தளிக்குவேண்டுவனவியற்றிடுவோர்மற்றோ
ருன்னுமென்னிதயமெய்தியுவப்புமிக்குறுற்றவாரே. (உஅ)

பாயிரமுற்றிற்று.

---

## அவையடக்கம்.

வலம்பொலிதருங்கடகமாநகர்வாழுமன்பர்
நலம்பொலியருட்கைலாயநாதனூர்மான்மியத்தைத்
தலம்பொலிதமிழாற்பாடித்தரல்வேண்டுமெனவினாவப்
புலம்பொலியதுமேற்கொண்டுபுகன்றனன்றுணிந்துமன்றோ. (க)

வேதமாகமங்கடேர்ந்தோர்விரிதருபுராணவல்லோர்
நீதநூலுணர்ந்தோர்போதனிலவுஞ்சித்தாந்தமேலோ
ரேதமியாவருக்குநீக்குமியலினற்றெளிவோராய
மேதகவுடையோர்க்கென்னூல்மிகநகைவிளைக்குமன்றே. (உ)

அவையடக்கமுற்றிற்று.

---

## சிறப்புப்பாயிரம்.

கண்ணியமலிந்தகடகமாநகர்வாழ்கைலாயநாதர்மான்மியத்தைத்
திண்ணியதென்சொலாற்சிவானந்தத்தெளிவெனச்செய்யுள்செய்தான்
புண்ணியக்கூடறநகர்வீரசைவப்புனிதனற்சாமிநாதையன்
புண்ணியதவத்திலுதித்தவன்கனகசபாபதியென்னும்பாவலனே. (க)

---

# திருநாட்டுப்படலம்.

சீருலாவியவெஞ்ஞான்றுஞ்செழித்தறுவிளைவின்சேர்வு
நீருலாவியநீள்வேணிநிமலனையறிதக்கோர்க்கு
மேருலாவியநற்செல்வத்தேற்றமிக்கமைந்துள்ளோரும்
வாருலாவியவெப்பாங்கும்வதிவதுசோழநாடு. (க)

சிலம்பினுட்கைலைபோலுந்தேவருட்சிவனேபோலும்
வலந்தருசத்திமாருள்வளர்மலைமடந்தைபோலு
நலஞ்செய்பல்சமயத்துள்ளுநற்சிவசமயம்போலு
நிலவுபொலிபன்னாட்டுள்ளுநிகழ்வதுசோழநாடு. (௨)

கற்பினுள்வடமீன்போலுங்களிற்றில்வெண்களிறேபோலும்
பொற்பினுளரம்பைபோலும்பொன்னுளாவலம்பொன்போலும்
கற்பினுள்வயிரம்போலும்வண்மையுண்மழையேபோலும்
பற்பலநாட்டினுள்ளும்பயனமைசோழநாடு. (௩

அறத்தினையறத்தினானல்லருத்தத்தையருத்தத்தாற்சீர்
பெறத்தகுமின்பந்தன்னையின்பத்தாற்பேரின்பென்னுந்
திறத்தநன்முத்திதன்னைமுத்தியாற்றெரிந்துகைக்கொண்
டுறத்தெரிவோரையென்றுமுள்ளதுசோழநாடு. (௪)

மறைமுறைவழுவினோரைமாதேவர்பபராசுரரைக்
கறைமுறைநூல்கல்லாரைக்கருத்துளைந்தெழுத்தெண்ணாரைத்
துறைபிறழ்மையினாரைத்துன்புறுமனத்தினாரை
யிறைதிணைமுறைகொடாரையில்லதுசோழநாடு. (௫)

திருத்தகுகைலையின்றுந்தென்றிசைநோக்கிப்போந்த
வொருத்தர்முன்னுரைக்கப்பெற்றவொப்பின்மந்திரத்தைத்தன்னு
ளிருத்தலாற்றீக்கைபெற்றதிஃதுபெற்றிலனுமென்னப்
பெருத்தபன்னூன்சாழப்பிறங்குவசோழநாடு. (௬)

வானநாடாளும்வேந்தன்வலியசூரனைக்கஞ்சி
மானவீரறப்போர்த்தேத்துமனையொடுமெழிற்றொளிக்கத்
தானமீந்தவனைக்காத்துத்தவாதுபொன்னுமீந்த
தன்னதால்வானம்போற்றவமர்வதுசோழநாடு. (௭)

பாண்டிநாடாளும்வேந்தன்பற்றியபிரமச்சாயை
யாண்டினும்பாருறாமலைத்திடத்தன்பான்மேவச்
சேண்டிகழ்மருதின்கீழ்வாழ்சிவபிரான்றன்னாற்போக்கி
வேண்டியயாவுமீந்துவிளங்கிடுஞ்சோழநாடு. (௮)

வேண்டிமூழ்குநர்க்கெல்லாம்விரிதருசிவதீர்த்தங்க
ளீண்டியவிடங்களெல்லாமென்றுங்கேத்திரங்கள்
காண்டிடுமுருவெல்லாங்கண்ணுதலுருவமாக
யாண்டினுமிலங்கப்பெற்றேயினையதுசோழநாடு. (௯)

வேதத்தினோசையெங்கும்விரிவாகமங்களோது
கீதத்தினோசையெங்குமொப்பிலான்புராணஞ்சொல்லு
நாதத்தினோசையெங்குஞானநூனவிலுவார்தஞ்
சீதத்தினோசையெங்குந்தருவதுசோழநாடு. (கO)

தூயசீர்தருங்கல்யாணசுந்தரியொருபாகத்து
மேயகைலாயநாதாவிழைந்தருள்கடகமுன்னாப்
பாயகேத்திரங்கள்தன்பாற்பற்பலபரவக்கொண்டு
தாயசீர்மேன்மைமிக்கவமைந்ததுசோழநாடு. (கக)

நண்ணிவாழதருவகைலாயநாதரைப்போற்றுமன்பர்
புண்ணியமனமேபோலப்புயலெழீஇப்பொலிவுற்றோங்கி
யண்ணியவளக்கர்மேவியவாவறவுண்டன்னோரை
யெண்ணிடார்மனமேபோலயிருண்டுவானெழுந்ததன்றே. (கஉ)

வானுறநிமிர்ந்துகொண்மூவந்தலிக்கோடைகாதிப்
பானுவென்றறிந்துமூடிப்பார்படும்வேனில்பாற்றக்
கூனியசிலைகொண்டாற்போற்கோதிலாவான்விற்றோற்றித்
தானதித்திட்டதென்னத்தவாதுறுமுழக்கெழுப்பி. (கங)

சையமால்வரைமேற்சார்ந்துசானமில்லாதவன்ப
ருய்யுங்கைலாயநாதருதவருட்சிறுமைபோல
வையமீதினிலாங்காங்குமவிதரமின்னுக்கான்று
மெய்யவர்க்கருள்கொடுக்குமிகுதிபோற்பொழிந்ததன்றே. (கச)

வரையிடமெல்லாம்பெய்தமரக்குவாலுடையகான
நிரையிடமெல்லாம்பெய்தநீடியமருதமென்னுந்
தரையிடமெல்லாம்பெய்தசகரர்தொட்டிட்டமுந்நீர்த்
திரையிடமெல்லாம்பெய்ததேங்கவாங்காங்குமன்றே. (கரு)

மாயிருங்கங்கைமுன்னாள்வந்தவோர்பெருக்கம்பொன்னிக்
காயிரத்தொருகூறேனுமமைதராதென்னப்போந்து
சேயிகில்கோங்குசந்துசித்திரகாயங்கைமா
சியமாதியவையோடுந்தெண்டிரைமீச்சென்றன்றே. (கசு)

சங்கஞ்சக்கரத்தினோடுதருசிலையெறுழ்வாடாங்கிச்
செங்கமலங்கள்கொண்டுசேர்தருபொறியும்பெற்றுத்
துங்கமார்கடல்கலந்துதோமறவுலகங்காத்தே
யங்கண்மாரிவலம்புரக்குமவண்பொருவும்பொன்னியாறு. (கஎ)

மலையிடையுதித்தலானுமன்னுயிரளித்தலானுந்
தொலைவில்பல்சத்திதன்பாற்றோற்றுவித்திடுதலானு
மலைவிலாப்பண்ணுமம்பல்லாற்றினலடைதலானுங்
கலைபுகழுமையாளென்னக்கவின்றரும்பொன்னியாறு. (௧௮)

ஆயவிம்மரிவெள்ளமாரமும்மணியும்பொன்னுந்
தூயதெண்டிரைக்கரத்தாற்றுன்னினர்வெறுக்குமாறு
தாயிருபாங்கும்வீசித்தவாதபல்லாறுய்க்காலாய்ப்
போயின்பமியார்க்குமெய்தப்புகுந்தனகழனியெல்லாம். (௧௯)

அன்புகொளடியார்தம்மையடியவர்காணுமாபோ
லின்புறநறுநீர்பாய்ந்தவிருநிலமியாவுங்காணூஉ
துன்புசகன்மள்ளரியாறுமதுவிலாப்புடைக்கமாந்திக்
கொன்பெறுமலர்த்தங்கையிற்கொண்டவாவுடையராகி. (௨௰)

ஓரறிவுடையதேனுமுயிர்க்கொலைமரீந்தரியார்க்குஞ்
சீரலவென்றெயஃதுசெயவருள்செயவல்லார்க
ளோரங்கணியவைக்கன்னவுறாஉமெனவுவையைத்தந்த
மேரமர்தரப்பிணைத்திட்டிடங்களுஞ்சேறுசெய்தார். (௨௧)

வயல்வளங்கொள்ளுமாறேவானமன்னவனைவாழ்த்திப்
பயனமைநாள்கோணோக்கிப்பரம்பிணைப்பூர்த்ததாய
நயமிகுதானந்தன்னைநாடிவெண்முளைநள்வாரி
வியனமைதரவிதைப்பார்விண்ணவர்மகிழுமாறே. (௨௨)

வித்தியவங்குரங்கள்மேதகுபசப்புமோசிச்
சித்திமிக்கார்தவம்போற்சிதைவின்றிவளர்ச்சியொன்னப்
பத்தியிற்பறித்துநட்டுப்பதத்தினாம்பாய்த்தி
யித்திணையிறைகாப்பேபோலெங்கணுங்காப்பர்மள்ளர். (௨௩)

ஆவல்செய்பைங்கூழ்க்கூடேயடுத்தபல்களையைநோக்கி
யோவலின்மள்ளராலேயுழத்தியருவப்பினெய்தி
யேவல்கொள்ளுறப்புக்கொப்பாயினவுமற்றவுங்களைந்தார்
மேவலூறாருட்காணின்வேரொடுங்களைவாரன்றே. (௨௪)

கட்டசெங்குமுதநீலங்கமலமுங்களையினேற்றி
விட்டனவாயபைங்கூழ்விரித்தபல்பணைவிடுத்துச்
சட்டமேவுறப்பருத்துத்தம்மிறைநகரங்காண்பா
னெட்டல்போல்வளர்த்துமேன்மேலெங்கணும்விளைந்தம்மா. (௨௫)

விளைந்துசேராகமுற்றிமேவுதல்நிந்துமீன்க
ளுளைந்துறமாறுநீலையோடலிட்டுறவடித்து
வளைந்துகீழ்ப்படிக்தசேர்ந்துமன்னர்களொருங்குரிந்து
களைக்குப்போய்க்களங்கடோறுஞ்சாலியின்போர்வெய்வர்கள். (உசு)

வரையயலாமொருங்கெழுந்தும்ருத்தினவந்தென்ன
நிரையுற்மாறுநின்றுநீண்டுயர்ந்தோங்கும்போரைத்
திரையிடைச்சாலிவேறுசார்ந்தவைவேறதாகப்
புரையறப்புரிந்துதூற்றிப்பொன்வரையெனக்குவிப்பார். (உஎ)

தரையுறவளைந்தசோர்ந்துசாலியையரிந்துகட்டி
வரையெலாமருதமீதுவந்தெனக்களங்கள்சேர்த்து
விரைவினிற்சாலிவேறுவிரிந்தவைவேறதாகப்
புரையறக்கண்டுதூற்றிப்பொன்வரையெனக்குவிப்பார். (உஅ)

விரையறுத்தளந்துகண்டவளத்திலாறிலோர்பாக
மரையனுக்குதவிமற்றையதனைத்தென்புலத்தார்தெய்வம்
விரையறுவிருந்தொக்கற்குங்கருத்தனுந்தனக்குமாகப்
புரையகன்மனைகடோறும்போதவும்பொதிதல்செய்வார். (உகூ)

நாடெங்குமிவ்வாறாகநடப்பனவாமென்றாற்
வீடெங்குமெண்ணெண்காகவிராவறமென்மேலோங்கு
மீடெங்குமியைதராவெண்ணிந்திரையிடமாமெங்குங்
கூடெங்குங்கழிகளெங்குங்கமழ்மலர்பொதிந்துதேங்கும். (௩0)

நீதிசேர்நகரமெங்குநின்மலனகரமெங்கு
மோதிடுசங்கமெங்குமோதிடுசங்கமெங்கும்
வேதியருறைவாரெங்கும்விரைக்கஞ்சமுறைவாரெங்குந்
தீதிலாவேழமெங்குந்தித்திக்கும்வேழமெங்கும். (௩க)

ஊவிபாய்கவரியாலேவானகர்போந்துவானோ
ரேவியலான்செருத்தல்சிறியகன்றென்னமோதி
யோவில்பாலசொழியாக்கவூங்கதின்மிதந்தமேதி
தாவில்பாற்கடலின்மீதுசயனமாறகமைகாட்டும். (௩உ)

கந்தியின்பலனேயெங்குங்ககனத்தின்மீதளாய்நி
வந்திறுமாக்குந்தென்னைவழங்கிடுபலனேயுங்கு
முந்தியுமறிதராதமாபலாகன்னல்வாழை
தந்திடும்பலனேயெங்குந்தவாதமர்தருஞ்சோணாடு. (௩௩)

புண்ணியவளவாகரும்புவிவளமெலாருக்குபாட
வெண்ணிலர்தமக்குமுற்று நிதிமெலவனுரைத்தாமன்பர்க்
குண்ணிறைந்துலாவுதும்வாளொளிப்புற்றார்க்குநீசெப்பாங்கர்
கண்ணியகடகமென்றுநகர்வளஞ்சிறிதுரைப்பாம். (௯௪)

திருநாட்டுப்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௯௪.

## திருநகரப்படலம்.

கொற்றமேவுகல்லியாணசுந்தரியையோர்கூறுப்
பெற்றசீர்சைலாயநாதரைத்தன்னுட்பெற்று
மற்றயாவர்க்கும்வேண்டியவாமெலாம்வழங்க
நற்றவத்துயாந்திருப்பதுகடகமாநகரம். (௧)

எண்ணிலாக்கலையாவுமெய்திடத்தருமியலாற்
புண்ணியப்பெரும்பொருளெலாமுதவிடும்பொலிவா
னுண்ணிலாவிடுமுமையவடிருமுகத்தொளிருங்
கண்ணிரண்டையுங்கடுப்பதுகடகமாநகரம். (௨)

கூட்டமேவியவறம்பலவற்றையுங்கொடுத்தே
தேட்டமேவியபெரும்பொருளனைத்தையுஞ்சேர்த்து
வாட்டமில்லதாம்வாழ்வையுமன்னுறவழங்கி
நாட்டமேன்மையையுடையதுகடகமாநகரம். (௩)

தேடுகற்பகமுடைமையாலரம்பையின்றிரா
வீடுநீர்பலபுலவர்களிருந்திடுமியலா
நீடுசெங்கநற்பதுமமென்றுரைத்திடுநிதியா
லுடுபொன்னுலகாயதுகடகமாநகரம். (௪)

உற்றயாவர்க்குங்கலியினைமேவுறுதோட்டி
மற்றமூவிருசுவையுணுமலிதாவூட்டி
முற்றுமோர்திறமேவுறவருணலமூட்டி
நற்றவர்தருதகையதுகடகமாநகரம். (௫)

கல்விசெல்வமென்றனவிருபொருளையுங்கலக்கப்
புல்லுநல்லறம்பொருளின்பமென்பதும்பொருந்த
மல்குமெண்குணர்க்கேற்றமெய்ஞ்ஞானமுமருவ
நல்குமேன்மையையுடையதுகடகமாநகரம். (௬)

அற்றமில்கவிகளில்லும்பொருளைச்செக்கடையி
லூற்றவேதுவையுரைத்துத்தன்மதசிறவுவதின்
முற்றநல்லறமாதியின்புறமொழிவதனிற்
கற்றுரைப்பவர்க்காகரங்கடகமாநகரம். (எ)

உலம்பொரப்பொறியொடுக்கியதவமற்றவொழுக்கம்
வலந்தருங்கொடைமாதுருக்கல்வியாமென்னு
நலங்கொளப்பொலிபுண்ணியத்தோற்றமாநான்குங்
கலந்துவாழ்தருந்தகையதுகடகமாநகரம். (அ)

பெண்ணுமாடையும்பேரணிகலமும்பெட்பியாரும
பண்ணுமுண்டியுந்தாம்பூலமும்பரிமளமு
மெண்ணும்பாடலும்பூவணையும்மெனெண்போக
நண்ணுஞ்சால்பினின்மிருத்ததுகடகமாநகரம். (கூ)

அமலுக்குற்றங்களாயவேரொன்றுமற்றைறந்துந்
தமமிகததருமென்றுசாரொணுமலேதணைந்து
சமனிலாக்கலேஞானமெட்டோடெட்டுஞ்சார்ந்த
கமடமைந்தவரிருப்பதுகடகமாநகரம். (௧0)

தவமளிக்குமிக்கடகமாநகரிடைச்சாரு
நவமிகுத்தபொற்கோபுரந்தெற்றிநன்றுஞ்சி
லுவமைதீர்பலமாளிகையொளிகண்மிகுறலாற்
சுவணநாடெனவானகர்க்கொருபெயர்சொல்வார். (கக)

சிறப்புமேயவிந்நகரிடைச்செறிதருதேசு
மறத்தின்மேன்மையும்வளங்களினமைதியுமறிவுற்
றுறக்கொளநலமயினுள்ளவும்வெறுக்கைநாடுறலான்
வெறுக்கைநாடெனவானகர்க்கொருபெயர்மேவும். (கஉ)

பூசைமாலயனுதியர்யாவரும்புரியத்
தேசையீந்திடுதிருவருண்மிகுதியைத்தேர்ந்தே
யோசைமேயவாணித்நகர்க்காசைமிக்குறலா
லாசைமாநகர்வானகரென்பர்கற்றறிந்தோர்.

வண்ணவெண்சுதைதீற்றியமாளிகையுங்கல்
புண்ணியத்திருக்கைலைமால்வரையினைப்போருவு
மெண்ணிலாதபொற்சிகரங்கண்மேலமர்திருத்த
லண்ணலைஞ்சிவபிரானமர்திடலெனலாமால். (கச)

# திருக்கடவூர்ப் புராணம்.

குருவுலாநீலமாடகுலாவிவானிழிர்ந்துதோன்றி
மருவிருபாலும்பொலசெய்மாடவக்கீர்வயங்கநிற்ற
திருமகள்பொறைதிருந்தநின்புவிமகளென்றுள்ள
விருமகளிருபாலுமேவவிருக்குமாலியற்கைகாட்டும். (௧௫)

ஆதிருழ்பரவைவைப்புக்காணியாமபொருப்பையென்றுஞ்
சூழ்கருபருநிழன்ஞுந்தோனறியகோனுநாளு
மாழ்குறுமாபூரிசகமடங்களையடுகோ
மேருமேழுலகமெனனுமியல்பினைதெரிக்குமன்றே (௧௬)

ஒளிக்குறண்ணடைடல்லாகளுவசணிதகரநானங்
களிப்புடைவாடச்சோய்காளைடவெள்ளம்போய்ப்பாய்ந்து
தெளிந்துமேணடிசேரமுகங்கைசசெய்தனகருமையென்று
வளிக்குலமுழுகைபாலாரளவையாரறைகிற்பாரே. (௧௭)

தாழ்வுறுவுணவுமேற்கொடமளிப்படாமுங்கொண்ட
வேழுபிரசளிநலியானையிட்டகோகருபுவலாரி
சூழிமாலியானைமிக்கவேசமாயினதுமறறை
வேழங்தன்யாவுமதோறபோர்விராவுறறுமேவுமன்றே. (௧௮)

அறநெறியிலாரிஞுஞ்மரியனவாயநூலின்
றுறையுறநிலாராஞுஞ்சொன்னவீயான்றடையராகித்
திறமுறத்தமைச்சோவாரைச்சின்ஞளிற்றெளிவுமிகக
கறையறுத்தறவுபூடங்கணிகையரிருப்பனேகம். (௧௯)

இயலிசைநாடகம்மென்றிசைந்தபைந்தமிழாராய்ந்து
மயர்வறநீறுங்கண்வனின்மணியுமைந்தெழுந்தும்வாய்ந்து
முயாசிவபூசையன்பாபூசைமெய்ஞ்ஞானதோங்கி
வயல்வளங்கொளுமவேளாளர்வாழ்தருமறுகனேகம். (௨௦)

நிலையுளபொருளீதென்றுநிலையிலாப்பொருளீதென்று
மலைவறவுறிந்தோரியருப்பொருளியார்கேட்டாலு
மிலையெனவிலாப்ஞானவியற்புலமையுரேபோன்று
மலைநிகராதேயங்கொள்வணிகர்வாழ்மறுகனந்தம். (௨௧)

மினுமொளிமேருவூர்ந்தோர்வேழம்வாம்புரவிகாலா
ளெனும்வகையாயசேனைபெய்தப்பெற்றிருந்துந்தாமுந்
தனுமறையினிதிற்றேர்ந்துந்தாவிலாவீரம்வாய்ந்து
மனுநெறிபோற்றோர்லோச்சுமன்னர்கள்மறுகனேகம். (௨௨)

# திருநகரப்படலம்.

ஓதுதலோதுவித்தலுவப்பூமிக்குடையராகித்
தீதறவேட்டன்மற்றும்வேட்பித்தல்செயிருநூர்கட்
கீதலோடேற்றலென்னுமிருமூன்றுதொழிலியற்றும்
வேதியர்வினையினோடும்விராவியமறுகனந்தம். [௨௩]

சமயநல்விசேடத்தோடோர்நிருவாணமென்ன
வமையுநற்றீக்கைமூன்றுமடைந்தகலர்தவாய
மும்மலமுதலினோடுமுருக்குபுமொழிபவண்ணு
வுமையொருபாகத்தானுமுறுவாரிருப்பநேகம். [௨௪]

விதுநிகர்முகநல்லார்க்கும்விளைமலிவோதன்னார்க்குங்
குதுகலமியாருமேன்மேற்கொளீஇக்குழீஇயியங்களார்ப்பப்
புதுநலமனைகடோறும்போதவும்புரிந்தசீர்சால்
வதுவையினுலாக்களூருமாறுறுமறுகுளோறும். [௨௫]

காதந்தப்பாதுநாறுங்கடிமலர்ப்பாடலங்கள்
சீதந்தப்பாதுசெய்யுஞ்செய்யதாமரைக்கயங்கள்
வேதந்தப்பாதுநாளும்விராவொலிசதிமெய்ப்பாங்கு
மாதந்தப்பாதுசாறுமறுகெலாமேன்மேலோங்கும். [௨௬]

நாகர்களுடுகொணாநானிலமளப்பிலாத
நாகவேர்வீழ்த்தாற்போலவனந்தநீள்சடைகள்வீழ்த்தி
மாகமேற்சாகைபோகவெள்ளலார்தமைநிழற்றிப்
போகங்கண்டவர்க்குநல்கிப்பொலியும்பாடலமதம்மா. [௨௭]

வேழமாமுகத்தெம்மண்ணல்விரும்பிமுன்னருச்சித்தேத்திச்
சூழுமாதேவன்றன்னைச்சுவையமைபைந்தேனாட்டிக்
கேழுலாமலவப்போதுங்களாமேற்றூவிநின்றீ
ரேழுமாவுலகம்போற்றிமெய்தப்பாடலங்குலாவும். [௨௮]

மேருமால்வரையேயென்னவிண்ணளாங்கோபுரங்க
ளாரும்பல்பொறிசேர்நாஞ்சிலளப்பில்காண்மண்டபங்கள்
சீருலாஞ்சபேசர்திங்கட்சென்னியர்கணேசர்கந்த
ரேருலாமற்றையோர்களிருந்தளியெண்ணிலாவே. [௨௯]

வானவரொருபாற்சூழ்வர்மனவழுக்குற்றோராய
மானவரொருபாற்சூழ்வர்மலத்திறங்குற்றம்பொருங்கு
போனவரொருபாற்சூழ்வர்புண்ணியவுருவந்தாமே
யானவரொருபாற்சூழ்வரண்ணலாலயத்துமாதோ. [௩௦]

பொன்னினுன்மன்னியாளுப்பண்பினை * கருக்கிரகத்துள்ளேற்
றன்னியசீர்க்கல்யாணசுந்தரியாரோடு
நன்னயமார்கைலாயநாதனாராகச்செய்து
மன்னியகருணைகூர்ந்துமகிழ்ச்சியோடினிதுவாழ்வார். (௩௧)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௬௬.

---

# நைமிசப்படலம்

---

ஏகமேவியசெம்பதுமத்துறை, வேதனுன்முன்விரைந்துகுழீஇச்செலீஇ
மோந்தமேயமுனிவரியாவரும, பாதமீதுபணிந்துபரவினர். (௧)

முனிவிர்காள்வம்மெனமுகமன்மொழீஇ, யினியநீரிங்கடைந்ததெவனென
னனிவினவியப்புறுகாலையிற், புனிதமாதவரியாரும்புகலுவார். (௨)

வேட்டயாவும்விரைவினின்யாவரு, மீட்டவல்லவிருந்தெய்வத்தேமொன்று
காட்டவேண்டினமென்னக்கருத்தினு, ணாட்டமூன்றுடையானருணாடியே.

கசிவுகூர்ந்துளங்காருணியத்தனைப், பசியதாகிவளர்ந்திருபக்கமும்
வசிரிகர்த்தருசத்தொளிவட்டஞ்செய், தூசிதமேவவுவப்பினுருட்டியே. (௪)

ஈதுமேவிபிறக்குமிடத்தினே, வாதுதீர்முனிவீர்காள்வதிவீரேற்
றீதிலெப்பொருளுஞ்சித்திக்குமென, வேதனேதிவிடையுமுதவினான். (௫)

படியைக்கீண்டபெலபலகாவத, நொடியினேகுமவ்வாழியைநோக்கியே
நெடியமாதவர்யாருநெருங்குபு, கடியகாலின்கவனங்கொண்டேகினர். (௬)

துங்கமேருவின்றென்பாற்றுதிபெறுங், கங்கையாற்றிற் † குதீசிக்கரையினிற்
றொங்குலாமலர்க்கொன்றைமராமரங், குங்குமஞ்சந்துகோங்குசெங்கோடுகள்.()

நாவனென்னிறநாகஞ்சதாபலந், தேவதாரங்கதலிதேமாபலா
வாவசோகமத்தமரசகில், பூவலர்ந்துபொலியுமந்தாரங்கள். (௮

பூவைமாயனைப்போன்றலர்பூருவம், பாவைபோற்பலகாய்த்திடும்பாதவ
மாவையஞ்சமயக்குமணமரம், வீவையார்க்கும்விலக்கும்யிருக்கமே. (௯)

மூன்றுதேவுமொன்றாகிமுதிர்தரு, மூன்றுசெஞ்சுடர்மூசனிகர்தரு
மூன்றுசத்திமுயங்குமிலைத்தரு, மூன்றுநேத்திரமொய்த்திடுகாய்த்தரு. (௧௦)

---

* கருக்கிரகம் - கருப்பக்கிரகம். † உதீசி - வடக்கு.

கந்தமாமலர்காய்கனிமிக்குத்தரு, திந்தமாநிலமெங்குங்குளிர்செயு
மந்தமாவனத்தாழியமர்ந்திட, வந்தமாதவர்யாரும்வதிந்தனர். (கஏ)

நேமிசம்பந்தமாயதியிற், லேமமைந்தவிடுகுறியின்றியே
காமிமோங்குநற்காரணமாகவே, நாயநைமிசமென்னநணுகிற்றே. (கஉ)

அத்துளோங்கும்முனைவாசவுனக, னகத்தியன்சுகனைசநகனாபத்தன்
மகத்துவத்துபமன்னியன்முற்கலன், மிகத்தவஞ்செயும்விச்சுவமித்திரன். (கங)

சாபங்கன்புசுண்டன்சமதக்கினி, பிரசண்டன்வசிட்டன்கபிலன்பெருந்
திரணவிந்ததிரிதிகழ்குச்சகன், கரவுதீர்கவுண்டின்னியன்காசிபன். (கச)

புலத்தியன்புருசுண்டிபோதாயனன், கலைச்சிருங்கன்பிருங்கிகௌதம
னுலப்பிலாப்பிருகுக்கிரவீரியன், றலைத்தவக்கூசுமூண்டன்றதீசியே. (கரு)

சனற்குமாரன்சனந்தன்சநாதனன், மனத்தநூயசனகன்மாண்டவ்வியன்
கனப்பராசரன்காணனிசையின்விற், பனதநூகியநாரதன்பாணினி. (கசு)

காத்தியாயனன்கற்றயாகனணுவன், பார்க்கவன்றுருவாசனுபத்தம்பன்
மாககண்டனற்றிரணதூமாக்கினி, சீர்ப்பரத்துவாசன்சுனச்சேபனே. (கஎ)

ஆதியோர்களளவிலர்கண்மணி, பூதியோடுபுனைநதைந்தெழுத்தெணி இ
மாதுபாகனைமுழுமகமொன்ற, தீதறுந்தவஞ்செய்யத்தொடங்குங்கால். (கஅ)

பல்லவாகப்பாமன்சரிதங்க, ணல்லயாவுநவிலுநயத்தின்
லல்லனீங்குமெய்ஞ்ஞானமமர்ந்திடச், சொல்லவல்லவச்சூதமுனிவந்தான். ()

வரவுகண்டிமொதவரியாவரும், பரவிநந்தந்தவத்தின்பயனென
விரவி ‡ விட்டாமீகிலமரச்செய், துரவுமேவியுவப்பினிருந்தனர். (உ0)

உமையோர்பாகனுவந்திடுமியூபமொன், றமையுமாறிவணுற்றவமர்ந்தனஞ்
சமையுநற்றவசாழ்ந்தனைநீவந்தே, யெமைநிகர்ப்பவரெங்கணுமில்லென்றே. (உக)

மாற்றுநீணைமைத்தியநாதனுர்க், கேற்றநற்றலச்சீர்த்தியிசைக்குநாட்
சாற்றிதற்கைங்குரோசத்திற்சார்தல,மேற்றிசைக்கண்விளங்குமொன்றென்றனை

மன்னும்வாளொளிப்புற்றாரின்மான்மிய, முன்னைநாளின்மொழிதருகரலையுங்
கன்னிகரிதற்கோர்குரோசத்தினி, லுன்னுதிசியிலோர்தல்முண்டென்றுய ()

ஆடன்மேவியவத்தலத்தின்பெயர், நீடலங்கொளநீவில்வாயெனப்
பாடலக்கள்பயில்கடகம்மென, நாடவவ்விருகாதநவின்றனை. )

---

அர்தமாதலச்சிர்த்தியினைத்தசையுந், சந்தமிழுவுறச்சாற்றல்வேண்டுமெனச்
சிந்தையின்புற்றுச்செப்பத்தொடங்கினான், மூந்தைமாதவச்சூதமுனிவர். ஈ. ()

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௨௧.

## தலவிசேடப்படலம்.

புண்ணியவளங்களளவிலவைபொதிந்து
கண்ணியபுலிந்தகடகம்மெனுந்தலத்துக்
கண்ணியபெருஞ்சிறப்பனேகமதிற்சில்ல
வெண்ணியவுரைப்பன்முனிவீரறிமினென்றான். (௧)

பொன்னுலகளிக்கவும்புவனமதொருவகே
மன்னுறவளித்திடவுமாசணைக்கிடக்கை
யின்னுறக்கமெய்திடவுமெண்ணுபவரோர்நா
ளுன்னுமத்தலத்தவமுனுற்றினுதவும்மே. (௨)

பல்வகையறந்தரும்பலபொருளளிக்கு
நல்லனவின்பஞ்செயுநனுகும்விருப்போர்க்குச்
சொல்லுமிவற்றின்புறததுத்துயதையுநக்கும்
மல்குமத்தலத்துவழிவந்தவர்க்குயாதோ. (௩)

முத்திபையளிக்குமவிமுத்தநகர்தன்னிற்
பத்தியினோராண்டளவுபண்ணுதவப்பேற்றை
யத்திசையோர்நாளியற்றியாங்குவதிவாரேற்
சித்திபெறநல்குமெனிற்செப்பலினியெனனே. (௪)

அலையெறிகருங்கடலலைவுபடலில்லா
நிலையுறுபெரும்புவிநிகழ்த்துநெடுவான
மலையினிறையும்மளவுமன்னிமெற்றத்தே
முலைவறக்கண்டோர்பலனுரைத்திடவொண்ணுதே. (௫)

பாதகமொரைந்தையுமுன்பாரிடைப்பயின்ற
நீதகலவேண்டுமெனச்சிந்தனைசெய்திற்பார்
மோதமிகுமத்தலத்தைமுன்னியடைவுற்று
லாதவென்றிர்த்புபணியாகிவிடுமென்றே. (௬)

அன்னுநற்சாதரங்களானவைகண்முன்று
கண்ணுமைம்முகமுங்கறைக்கண்டமுங்கலந்து
நண்ணுமென்னினத்தலத்துநாளும்வதிவோர்கண்
மண்ணுலகரென்றுணமதித்திடவொண்ணாதால். (௭)

அத்தலத்தினோர்கணமதாயினும்வசிப்போ
ருத்தமப்பலனெடுத்துரைத்திடவொண்ணாதால்
சித்தமிக்குவப்பினென்றுஞ்சேர்ந்தவர்பெறும்பே
றித்தலைத்தெனத்தெரிந்திசைக்கவிசையாதால். (௮)

தேங்குபலநீர்நிலைகள்யாவுஞ்சிவதீர்த்தந்
தீங்கில்பல்லுருவமுஞ்சிவனுருவதாகு
மோங்குபலமாந்தருமுயர்சிவகணங்க
ளாங்கெனினதனுயர்வளத்தலரிதாமே. (௯)

தேவர்கள்சிகாமணியெனுஞ்சிவபிரான்முன்
னவலொடுமீன்றருளுமைந்துகரத்தண்ணன்
மேவிமுன்னைநாளினினவிராயவிசேடத்தான்
மூவுலகினும்புகழ்முதிர்ந்துமுழங்கும்மே (௰)

உருப்பொலிபல்லண்டமுழுயிர்த்தொகையுமற்றுங்
கருப்பமதில்வைத்துதவுகாரணியொடண்ண
லிருக்குமணக்கோலமுன்னிசைந்தவிடமென்னின்
றிருக்கயிலையென்றுரைசெயச்சிவனுமன்றே. (௧௧)

பாடலான்னீழலிற்பரனுறையும்பண்பாற்
பூடலமமைந்திடுநற்பாடல்புரம்மா
நீடலங்கொள்வேழமுகரேத்துநியமத்தா
னீடலஞ்சொல்வேழமுகேசம்மெனநிலவும். (௧௨)

மாணுறையும்வேழமுகத்தண்ணன்மகிழ்வுற்றுக்
காணமுறக்கல்யாணமதைக்காட்டியகலப்பா
லோணமதனிற்பிறக்கையுற்றவன்முன்னோ
ராணமிக்கமைதருங்கல்வியாணபுரமாமே. (௧௩)

ஒன்றியவிக்கோலமொடுயர்கயிலைபோலத்
துன்றியருள்செய்கவெனத்தும்பிமுகர்கேட்க
வென்றுங்கடகம்மெனவிரும்பியவியலா
லின்றுமத்தலங்கடகமென்னவிசைப்பாரே. (௧௪)

தண்ணருள்விளங்குகடகம்மெனுந்தலச்சீர்
நண்ணருமனந்தனுநவிலமுயல்வானே
லெண்ணரும்யுகங்கள்செலுமென்னினுலைப்பாரார்
பண்ணரும்பெருந்தவங்கள்பண்ணுமுனிவீர்காள். (௧௫)

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௩௧.

# தீர்த்தவிசேடப்படலம்.

கலன்குலவுஞ்சலாயநாதரவரிடப்பாகந்
துலங்கவமர்கல்யாணசுந்தரியார்க்கெதிராக
வலங்குமொருபெருந்தீர்த்தமத்தீர்த்தவருட்டிறமும்
மலங்களறமொழிக்திடுவன்மாதவஞ்செய்மாமுனிவீர். (க)

கயமுகனையட்டெருங்காருணியக்கணபதியா
ரயர்வுசிறிதேனுமுறாதகன்றிடவொளுங்குறலா
லுயர்வுசமனென்றுமிலென்றுலகமெலாமுரைத்தேத்த
மயர்வுதவிர்தரத்தீர்த்துவயக்கியதாலத்தீர்த்தம். (உ)

துதிமேவுகல்யாணசுந்தரியார்திருமுன்னர்
வதியுமொருதிறத்தானுமங்கலமாருதென்றும்
விதிவழியாடினோர்யார்க்குமேன்மேலுமுதவலினு
வதினுமங்கல்யாணதீர்த்தமெனவாயதுவே. (ங)

பொற்றலம்வாழ்கற்புகழும்புலவர்களுநறுமுறப்ப
முற்றறிவினோர்பலருமுதுக்குறைவில்லோர்பலருந்
தெற்றெனவந்தாடிடுவகாற்சிந்தையுவந்தனதாலாற்
கற்றவர்கள்சொலுகாமங்கற்பகதீர்த்தமதாமால். (ச)

சென்னியினின்மதியணியுஞ்சிந்துரமாமுகமுடைய
முன்னவனாடியதான்மொழிவரியமுதற்றீர்த்தந்
துன்னிப்படிந்தானேர்க்குச்சுகஞ்செயலாற்சுகதீர்த்த
மின்னவைகாரணப்பெயராமிடுகுறிகளெண்ணிலவே. (ரு)

திருமலியும்பெருந்தடத்துத்தெண்டிரைமோதிடுந்தெண்ணீர்
குருமலியுங்குவலையத்திற்கொடியமலத்தொடக்குடைய
கருமலியும்பிறங்கலையெனுங்காரணற்றிற்கலப்புண்ட
வருமலியாவருந்தோயினொழித்துவகையுளுற்றிடுமே. (சா)

சொல்லரியபேரன்புதுளும்பவதிற்றோய்ந்திடுவார்
வில்லமொடுமெதிவிண்ணீர்விரவுமுடியோடெழுவார்
புல்லரியவவ்வன்புபொருந்தாதமூழ்கிடினு
மல்லலறப்பொன்னகரமண்டவரெனினறைவதென். (எ)

கடியாதியாக்தொடர்ந்குங்கழியாமும்மலத்தொடக்கும்
விடியாதமிடித்தொடக்கும்வீட்டிடுமோலத்தீர்த்தம்
படியாதிமண்டபஞ்செய்பண்பினர்பூபாலரென
முடியாதபெருவாழ்வுமுயங்கவெழுநாள்வாழ்வார். (அ)

தெள்ளியவத்தீர்த்தத்தின்சேதுவிற்றென்புலத்தார்தமை
யுள்ளியியற்றியகடனிலோங்குமுவப்புடனிட்ட
வெள்ளினிலெல்லாங்கொன்றினுக்குமெண்ணரியப்பல்லூழி
கொள்ளிழிநற்பசுநிழற்கீழ்க்காவலராய்க்களிப்புறுவார். [க]

ஆழ்ந்திடுதீர்த்தத்திரத்தயர்தருபிப்பலமுனைத்
தாழ்ந்திடுவார்மதிவாரஞ்சார்ந்துவருங்குருவதனிற்
சூழ்ந்திடுவார்சுற்றத்தின்றொகைசூழப்பல்லூழி
வாழ்ந்திடுவார்மனையோடுமெகாரோரமொரிலத்தே. [illegible]

விளங்குமதன்கோட்டினிற்பன்மேடையினின்மண்டபத்தி
னுளங்களிவுற்றருகிடவீரொன்பதுபுராணமுஞ்சொல்
களங்கமிலாவறிவினர்க்குக்களித்துத்தங்கைத்துதவி
னளந்திடற்கரியபலனழிவின்றியளவுறுமே. [கக]

துங்கமிசமலியாண்டுதோற்றாவாரியசுதினர்
திங்களுதிப்புவீர்வயனஞ்செங்கதிரைவெண்கதிரை
பங்கமறப்பாம்புசுவைபார்த்துமிழுங்காலமதி
லங்கணுவப்புடனுமவர்பலனையளப்பவரார். [கஉ]

மட்டலவும்பங்கயங்கண்மலிதரவெங்கணுமலர்ந்தே
வட்டதியையினுமணநசளவளித்திடும்புகலைக்
கிட்டியடைந்தாடிடுதல்கிட்டலரிதாயிடினுந்
தொட்டவரைத்தொட்டிடினுந்தோடங்கடொடலின்றே. (கங)

வண்டளவில்லன்பரடிமதுவருந்துமாநீலம்
புண்டரீகஞ்செங்குமுதம்போதலர்தீர்த்தமதை
யுண்டலுவந்தாடிடுதலொல்லாதேனுங்கணிழ்ந்து
கண்டவர்க்காணினுங்கைலைகலந்திடுதற்கையமென்னே. (கச)

தலத்தினுயர்தீர்த்தஞ்சாரமபருவளமையர்வும்
புலத்தினுயர்வேதாவும்புகன்றிடப்போகாதென்றே
கலத்தினுயர்ந்தோர்நவிலினும்விதக்காண்ணிடுமோ
மலத்தினுயர்குழம்போவுமாதவத்துவாஞ்சையினீர். (க௫)

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கசு.

# மூர்த்திவிசேடப்படலம்.

ஓதஞ்செறியுலகத்தாயிலொழியர்தமர்தருதற்
போதங்கவிர்நாவுஞ்சிவபோதஞ்செறிவுறவுங்
காதங்கமழ்தருபாடலக்கண்ணார்கயிலாய
நாதன்றனதருண்மாண்பியநயக்கச்சிலநவில்வாம். (க)

அண்டர்க்கிடையமருற்றிடுமெய்யார்க்கரிதாயும்
தொண்டர்க்கெளிதாயும்வெளித்தோன்றுமலிலிங்க
மண்டப்படுமிலமூலமதினின்மாழ்கும்பசுவெல்லாம்
பிண்டப்பெயரடையச்செயுமென்றேமறைபேசும். (உ)

ஈனங்களறுந்தாணுமவ்விலிங்கந்தனையெய்தி
வானம்பணிபொருளேயெனவாயாரவழுத்தி
ஞானந்தருமாணவனென்றெண்ணலொழித்துச்
சானம்மவனென்றிடறருமேயிதுசாதம். (௩)

உலையாவிருவினையாமலையோயாதலைத்தலைசு
நிலையாப்பெரும்பிறந்தையெனுநீத்தற்கருஞ்சலதிக்
கலையாவருளமையும்மருவுருவாயவவ்வண்ணற்
றலையாமபிதானம்பெருங்கலமாயமைதருமே. (௪)

பொன்னைப்புனைகலத்தைப்பலன்போதச்செயும்புலத்தைக்
கொன்னைப்புரிபிறவற்றையுங்கொடுப்போர்கடமக்கே
மின்னைப்புரைதருமற்றையவென்றேவிடுவித்துத்
தன்னைப்பயனுக்கொள்ளவத்தனிமாமுதறருமே. (௫)

தவத்தைப்புரிந்தேவைகலைத்தணப்போர்தமக்கேபோ
தவத்தைக்கொடுத்தினிதாண்டிடுந்தனிவள்ளலத்தாணு
வவத்தைத்தலைத்தனைநோக்கியவல்லாதனவெல்லா
மவத்தைக்கிடமென்னுந்துணிவன்பர்க்களித்திடுமே. (௬)

உவராத்திரிமலப்பூட்டினையொழிக்கும்வலியுதவும்
பவராத்திரிசடையாயெனப்பகர்ந்தப்பசுபதியைச்
சிவராத்திரியினிற்கூவிளஞ்சேர்ப்பித்தருச்சிப்போ
ரவராத்திரிதவராயினுமமரர்க்கிறையவரே. (௭)

அல்லார்தரிக்களத்தாக்கல்செய்தமரார்க்கருடருமவ்
வல்லாளனைமதிவாரமுன்வாரந்தொறுமகிழ்ந்தே
நல்லாதரவொடுபூசனைநாடிப்புரிவலத்தோ
ரெல்லாவுலகமுமீன்றிடுமிறைபால்விருப்பாரே. (௮)

சேலைப்பொருகயல்பாய்மண்டீர்த்தப்புனறிளைத்தே
பாலைப்பொருநீற்றேகண்டியுந்தாங்கியப்பானைக்
காலைப்பொழுதினும்முயர்க்கோகனகற்கண்ணு
மாலைப்பொழுதினும்போற்றிடமாலின்பநம்வருமே. (௯)

முப்பாரும்வியக்கும்பதின்மூன்றாந்திதியதனி
னப்பானிறைமுடியன்னவர்க்கபிடேகமியற்றித்
தப்பாற்பலசுடரேற்றுபுதொழுதேத்திடுவோர்க்
கெப்பாதகமூர்த்தியினிலிடும்பெஞ்செனவாமே. (௧0)

ஷிடாகமதணிபன்னவர்மேவாலயந்தூக
றிடமேவுறயெழுகல்பலதீபந்திகழ்வித்தன்
மடலாரமலர்தொடல்குழுதல்வந்தித்திறைஞ்சிடலாந்
தடமார்தொழில்புரிவோர்பலன்சாற்றச்சமையாதே. (௧௧)

இனையும்படிபுரிதீவினையினையாதனபுரிநல்
வினையுஞ்சமச்சன்மார்க்கமெனமெய்ஞ்ஞானியராகி
வனையும்மவர்பதமும்பெறுவாரீன்றபிதாவோ
டினையும்மெனவிலர்தருமூவர்ப்போற்றிமேவரே. (௧௨)

ஓதக்கடலுலகத்திடையோங்கும்பசுவெல்லாந்
தீதற்றிடவேண்டும்மெனச்சிந்தித்திடினன்று
ரோதற்கரிதாகுங்குணநீதத்தொடுரூபா
நீதப்பொருளாகிக்குணநீதத்துறல்செய்வார். (௧௩)

தரமாறுதலில்லாதுயர்தானந்திரவியமந்
திரமான்மமிலிங்கம்மெனச்சேர்சத்திகளைந்தும்
பரமார்த்தரச்செய்தர்ச்சனைபயில்வோர்தமக்கன்றோர்
வரமானவையெவைவேண்டினும்வாய்க்கத்தருவாரே. (௧௪)

மின்னார்மருமத்தேவும்விதந்தோதிடவொண்ணு
வன்னார்பெருமையினற்பழமறியும்மறிவில்லா
வொன்றாற்க்கவைமேவும்படியெடுத்தோதிடவிசையும்
பன்னுளினுந்தவமேபயனாகப்புரிபவீர். (௧௫)

மூர்த்திவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௧௫.

# தேவர்கள்கயிலைசெல்படலம்.

சீவர்கள் யாருந்தத்தஞ்செல்கதியிஃதேயென்ன
யாவர்களுங்காணொண்ணாவிருந்தவமியற்றவீர்காண்
மூவர்களுங்கண்டஞ்சுமுனிகயமுகவன்றீங்காற்
றேவர்கள்கயிலைசென்றதிறஞ்சிறிதெடுத்துச்சொல்வாம். (௧)

முன்னையோர்கற்பந்தன்னின்மொய்வலிமுழுதும்வாய்ந்து
தன்னையேநிகர்த்தோனாகத்தானவகுலத்திற்றோன்றித்
தென்னையெவ்வேதியானுந்தெறலிலாத்திறல்பெற்றோனு
யன்னையொப்பாகுமீசனருளருளுடையோனாகி. (௨)

கயமுகனெனப்பேர்வாய்ந்துகடுங்காலகாலனாகி
வியனரம்புவிவான்மூன்றும்விராவுறக்கொடுங்கோலோச்சிப்
பயமுடனயன்மான்முன்னோர்பராஅய்ப்பணிந்தேவல்கேட்கச்
சயமிகவுறப்பல்காலந்தானரசியற்றிவாழ்ந்தான். (௩)

அமரர்களொடுமுற்றுமமரியற்றிடவொனாகிச்
சமரிடைப்பகைபகைத்துத்தாங்கிடேமெனச்சவட்டித்
தமரொடெக்காலுமவைகுந்தமணியகாமுற்ற
விமமெனவளைந்துபற்றவிரிந்தவரேகினரால். (௪)

மாலயன்வானவேந்தன்மற்றுமுள்ளாயதேவர்
சீலமார்தரவெக்காலுஞ்செய்தவமுனிவரியாரும்
வாலறிவுருவமாகவாழுமாதேவன்வைகுங்
காலம்யாவையுந்தேர்ந்துள்ளகயிலைமால்வரையினண்ணி. (௫)

எங்களாரியர்தவியார்க்குமிறையிவனென்னவாகிச்
செங்கையிற்சூலமேந்தித்திருக்கயிலாயங்காக்குந்
துங்கமார்தருச்சிலாதித்துணைப்பதந்துதிக்கவன்றே
னங்கணனுளையாலேயவர்களுட்செல்லவுய்த்தான். (௬)

மூத்தவானவர்முன்னானோர்முழுமுதற்கடவுளாய
வாத்தனையாதியோமடிதொழுதிறைஞ்சிப்பல்கா
லேதநின்றோர்கடம்மையெல்லீருஞ்சுகமோவென்று
சாத்திரமுதல்வினவத்தங்குறைமொழிவதானார். (௭)

தானவக்கயமுகற்குத்தடையறத்தேவரீர்முன்
னூனமிலருந்தவொப்பிலாவரத்தினாலே
யீனமார்தொழில்களெல்லாமிறைநாள்வரையியற்றி
மானமும்யாம்வாணுடம்வளங்களும்வழங்கிப்பின்னும். (௮)

முட்டியாக்குவித்தசெங்கைமுன்னுத்தமாங்கமீது
குட்டிப்பின்மாறித்தத்தங்குழைச்செவியதனைப்பற்றித்
தட்டின்றிக்குதிகாறன்னைச்சகனம்போய்த்தாக்குமாறே
ஊட்டியிலாதுதாழ்ந்தமலசிறேஞ்சாலவண்ணல். (௯)

மழுப்படைத்திருப்பிறேலேவணங்கலர்குழாக்கணீரு
விழுத்துவிரென்னவேதம்விசப்பதுமெய்ம்மையன்றே
விழுக்குடையெமையுமேலாவிபம்பிடுமுகமன்போலோ
வழுத்துவோர்க்கருண்மினென்னவள்ளல்வாய்மலர்வதானார். (௧0)

கண்டகனாகுமந்தக்கயமுகனாவியீண்டே
யுண்டிடவேண்டுமென்னினுனக்குதுந்தெரியவேண்டுமோ
வெண்டிசைப்பாலராலுமெம்மாலும்மாலுமீகா
பண்டவனம்பாற்பெற்றவரமெலாம்படிறதாமோ. (௧௧)

தீதிலாத்திணையிரண்டுஞ்சேர்ந்தவோர்தேகனாக
நீதிசேர்நிலத்திற்றோன்றுநின்மலனியாவனன்றே
னோதியலாதவேதியிருங்கரமதனினேற்றுக்
காதிடுவானேலந்தக்கயமுகன்மாய்வனென்றே. (௧௨)

இருதிணைகலந்தவைங்கையபமுகத்தேவையேவிக்
கருதலனாவியாங்கேகான்றுநின்றிடுமொறின்னே
பொருதிடவிடுவனீவிர்பொருமலைவிடுமினென்ன
வொருதலையன்னேரெய்தியுவப்புமிக்குடையராகி. (௧௩)

விரைமலரடியிற்றாழ்ந்துவிடைகொடுவிண்ணோரேக
வுரைமனமிறந்துநின்றவும்பன்மாமுகத்தேவைக்கூஉய்
விரையமறையில்லாத்திங்கைவானகராதியோர்கள்
கரையானாளுங்காணுங்கயமுகக்கயவன்றன்னை. (௧௪)

கணங்களாந்தானைசூழக்கடிமதின்மதங்கமெய்தி
வணங்கலனவனைக்கட்டிவந்துநின்றுழியேயாமவர்
தணங்கனைமுடியின்முன்னாளமர்ந்துவேண்டியவரத்தை
யிணங்கவன்றளிப்போமென்னவிதுவிடையென்னவேற்றார். (௧௫)

தேவர்கள்கயிலைசெல்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௮௧.

## விநாயகர்வரப்பெற்றபடலம்

என்றருண்முனிவரையிறைஞ்சப்பு, வென்றிவேழமுகத்திறைவேண்டிய
தென்றிசம்பஞ்சதுப்பியம்புமென, நன்றென்றேதிருவிளையாயினன். (௧)

முனிவர்சேணமின்கண்முன்னிட்டசயிலையில், விரியவாறுவிதானமிலங்குற
நனியுயர்த்திடுகோலம்பொன்னினிற், புனிதவொண்பன்மணியும்பொருத்தியே

சஞ்சவேந்தன்கணகிலாதம்மொளிப், புஞ்சமேயிதுவென்னுப்புனைதரு
மஞ்சமேலமைமாமுகமைந்தனைச், செஞ்சமேயடிமீதுதிகழ்தர.

வைத்திருந்தகல்வண்டன்மகிழ்ந்திடுஞ், சுத்தநாளதுசக்கிரந்கேற்றதா
னத்துசோறளைகஞ்சநாப்பென, வொத்துநர்நார்க்கருவியுடையராய். (௪)

இயக்கமாதர்களொண்ணிலமெய்தியே, நயக்குமேழ்சுரமுந்கவில்பாடலு
முயக்கம்வேற்றுமைமுன்னவரியதா, வியக்கவெம்பிசைபண்றல்விதமெலாம். (௫)

பாடினார்கள்பணிந்தார்பூரவினுர், நாடினார்களமலைவரங்களைக்
கூடினார்கள்குலவுறுதங்கள், நாடினார்களங்காரியமீட்டமே. (௬)

இதனைக்கேட்டவிளிமையினம்பிகை, வதனநோக்கியம்மன்றலைநோக்குற
வுதவல்வேண்டுமினுமுவந்தேனென, மதமுகத்துத்தன்மைந்தன்வினவவே. (௭)

கயவனயகயமுகற்காய்ந்துநீ, வயம்விராய்வந்திருக்கும்வயினிடை
நயமுலாவுநின்றுந்தையுநாமுமாய்ச், சயமிகுந்தவக்கோலந்தருவமே. (௮)

என்றனளிதையேயவ்விறையவ, னொன்றநல்குவயென்றதென்றேதலு
நன்றுநன்றென்றுநற்றவச்சுதனைத், துன்றுமற்றதுஞ்சொற்றிடப்போற்றினர்.

விநாயகர்வரம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௦.

---

## கயமுகசம்மாரப்படலம்.

—:O:—

ஆதருக்காலயினாருளாதரவைங்கையின்
மேதகுவேழமுகத்துவிநாயகமெய்யாளன்
காதகனையக்யாசுரனைச்சமரிற்காய்ந்து
தீதகல்வித்ததிறத்தையெடுத்துரைசெய்வாமே (௧)

நண்ணினரியாரையுமூறுதவிர்த்தருளோம்பப்
புண்ணியமாமுதலென்னுநர்தேமதுபோயீள
நண்ணியவையமிவர்க்குலகத்தவர்காடுஞ்சேர்
வெண்ணிலவென்றிடுவெண்குடையெய்க்குநுமேலோங்க. (௧)

வூற்புறலாயவியங்கடெழிந்துறமாறுதே:
யற்புதமேயகொடித்திரளாணவலைசக்தாட,
சிற்பரஞானசொருபரினேரிதுதேர்மின்க
ணற்புவியீரெனல்போற்கவரிக்குலநன்காட. (௨)

ஊழியினங்கியுமிழ்ந்தொளிவீசியுலாங்கண்ணுர்
தாழ்விலிடிக்குலமுட்கவுரைத்திடுதண்சொல்லு
மாழியொடெஃகமழுப்படையேந்தியவங்கையுங்
காழ்மணமும்முளபூதரோடேகினர்கல்லென்றே. (௩)

ஆற்றனிலாவசுரக்குழுவாதியனேனோரார்
போற்றுதலாயழகுக்கிடமாயுயர்பொன்னுலுஞ்
சாற்றரிதாநவமாமணியாதியதன்னுலுந்
தோற்றிடுகோபுரமாமதிலாற்புடைசூழ்ற்றே. (௪)

தாவில்பலேதிகளாலுமலைத்திரடம்மாலும்
ஆழியினாலும்வளைந்தலைமேதிமொற்றாலு
மோவிலினும்பலமாவளனாலுமுயர்ந்தோங்கி
மேவியமூவுலகுந்தொழுமாவரமேவுற்றே. (௫)

இந்திரரஞ்சுமதங்கநகர்ப்புறமெல்லோரும்
வந்துறவோர்குறள்பாசறைகாணவதிந்தோரா
யந்தரர்தம்மையணக்குதவின்றியமர்ந்தாயே
லுய்ந்தனியின்றெனின்மாய்ந்தனையென்னவேசொற்றுய்த்தார். (௬)

ஒற்றனடந்தமர்தோன்முகன்முன்னருவந்தெய்த
மற்றவன்மந்திரரோடரசாற்றிவதிந்தார்வோ
னுற்றவுன்யாரையடைந்ததுகாமமுமோதென்றான்.
செற்றமுண்மேவியபூதனுரைத்திடல்செய்வானே. (௭)

ஏதமெவர்க்குமிரித்தருள்செய்திடுமோம்ப
நீதனருட்கிடனானவனாதலினின்றே.
யோதவிடுத்திடமேவியதூதவனெப்பில்லாப்
பூதபிருங்கிரிடன்னணியும்பெயர்போற்றிக்கேள். (௮)

வானவர்சம்மைவருத்தலின்றிவ்விந்தாயே
வினையிலாதுபன்னாளமர்வாயவேறின்றாயின்
றானவரோடுனையும்மடிவித்திடர்தான்றீர்ப்ப
ஞானசனற்கமரிற்கவிழ்பாலெனலாவாயே. (௪0)

என்றசொறன்செவியேறிடுமுன்னனவெல்லாமங்
கொன்றவருக்கொட்டைந்ததுநோவருத்தோனாய்
வென்றிமிகுத்தவனென்னினும்யாரவன்வேறண்டே
கொன்றனனாகுவனின்றனவேர்புகுதித்தானே. (௪௧)

அன்னவரின்பினமர்ந்திடல்செய்கலனல்லாயற்
றன்னுமையும்விடுவேனலனோடுபுசொல்லென்றான்
முன்னவன்முன்னவனெய்தியுரைத்திடுமுன்னாகத்
தன்னிகர்சால்வதையாகியசேனைகடன்றோடே. (௪௨)

சந்திரன்மானுமிழற்கவிகைத்திரடாமோங்க
வந்தரமீமிசையிற்கொடியான்வசைந்தாட
விந்திரனஞ்சுறுமேதிகளோந்திபெதிர்ந்தெய்திச்
சுந்தரவைந்நகையர்சேனையின்மீதமர்தொட்டானே. (௪௩)

ஓதநெடுங்கடல்போலசுரக்குழுவொல்லென்றே
பூதர்கண்மீதுவிழுந்தமராடுறுபோதின்கண்
பீதமுடன்சிரமுங்கரமும்பறிபட்டோட
காதற்பெருங்கணமோதியடர்த்தனநாடாதே. (௪௪)

வில்லொடுவாண்முசலங்கதைநேமியின்மேலானோ
ரொல்லெனவையர்கணத்தினையோடியொறுக்குங்கால்
வல்லவனாயபிருங்கிரிடன்கரவாளாலே
யெல்லையிலானவரானவர்தம்மையிறுத்தானே. (௪௫)

வீரமிழந்தனர்சிற்சிலரியாவருமேவொண்ணாத்
தீரமிழந்தனர்சிற்சிலர்தங்கைத்திண்மேதிப்
பாரமிழந்தனர்சிற்சிலர்தானவபாலன்றன்
வாரமிழந்தனர்சிற்சிலராயவண்மாய்ந்தாரே. (௪௬)

தானைகளோடியுமாய்ந்துமிரிந்திடலுன்றேர்ந்தே
யூனமுறும்படிசெய்குவனென்னவுருத்தோனாய்
வானிடுவில்லிதுவென்றிடவோர்வில்வளைத்தேகித்
தீங்கிருழியெரிரக்கணைதூய்ச்சமர்செய்தானே. (௪௭)

## கயமுகசம்மாரப்படலம்.

பூதநெடும்படையானவெருண்டுபுரண்டோட
வேதமுதற்கொருவித்துதனித்தவண்மேவுங்கா
ணீசமகற்றுகயாசுரன்றத்தலைசேராகி
யேதமகத்துமிகுத்தவனாய்வைகியேயேகும். (௪௮)

யானைமுகச்சிறுவாவெனையஞ்சலையேயாகிச்
சேனைமுகத்தோடமர்த்திடவந்தெதிர்சேர்ந்தாயோ
வூனையெடுத்தவரியாவரெதிர்தனையுய்ந்தாரே
மானைநிகர்த்தனையான்புலிபாயினவ்வாழ்வாயே. (௪௯)

பீனமருந்தினும்வாய்மணமாறாசிறுபிள்ளாய்சேன்
வானவாதவுகணிமிதந்நின்றாவிலையமாய்சகாவே
நானுனையின்றுவிடுக்குவனீயிவணண்ணாமே
ஞானமிகுத்தவனாயினடந்திடுகென்றனனன். (௫0)

அன்றியேபன்றேடுமமர்த்திடவேண்டுவையானாலேயத்
கொன்றையணிந்தவனீந்தவரங்கள்குறிகவில்லா
பொன்றவறிந்தபடைதிறம்பாவையுமொவ்வொன்றாச்
சனறுதலினறியேபனமுன்னமெடுத்தவைதாட்டென்றே. (௫௧)

அஞ்சலையாகியவுன்றனைமுன்னமடர்த்தப்பாற்
றஞ்சமதாயவர்தங்களைவீட்டிடுதாவாதே
யெஞ்சலிலாதநல்வாகைதரிக்குவனென்றாறல்
செஞ்சநகைத்தமரண்ணலுரைத்திடல்செய்வாரே. (௫௨)

தன்னைநிகர்த்திடுசங்கரனாருடன்றாலே
மின்னைநிகர்த்திடவுன்னையழித்துயர்விண்ணோரைப்
பொன்னகரத்தினமர்த்துவன்வீண்சொல்புகல்வானேன்
றன்னமராற்றுதியேல்விரைவென்றனர்தோழில்லார். (௫௩)

சீற்றமொடோர்சிலையங்கையினேந்துபுதின்றானை
யேற்றிமுழக்கினனெண்ணிலவாளிகளெய்தானு
வேற்றிடுதண்டின்மறித்துமறித்தவைதூள்செய்
மாற்றலனங்கைவிலும்பொடியாயறமாய்த்தானே. (௫௪)

மற்றோர்கொடுஞ்சிலைவாங்குபுயத்திரிமாருமே
யுற்றசமாத்தலைமாமழைபோறசொரிவுற்றேனாய்
நீற்றிடவோர்க்கதையாலவையாவையுநீறாக்கி
கொற்றமிகும்படிகொண்டவிலும்பலகூறிட்டார். (௫௫)

வேறொருவில்லோவின்னைவுர்தம்படைவெவ்வேறே
மாறிவணைக்கமோடேயின்னைவர்தெய்தி
யேறுயாவித்தகர்மைர்தரைமேயுத்தியினைப்பாதத்
தாறியசிற்றமோடார்ந்தனதோந்தனன்றனே. '௨௬)

வெய்யவனுயகயாசுரனென்னவியப்பென்றுச்
செய்யபெரும்படைகொண்டபினுஞ்சமாசெய்யுங்கால்
மெய்யாணுககள்புரிந்தராமீதினின்வெய்தாய
பொய்யனடுங்கவடித்திடலும்முயிர்போகானுய். (௨௭)

வீழ்ந்தபெரியபொழுதன்னவன்மாழ்கிடவிண்ணேர்கள்
வாழ்ந்தனம்வாழ்ந்தனமென்றுதுதித்துமகிழ்ந்தாரே
தாழ்ந்துமுனைஞ்டியபூதர்களும்மகிழ்தாங்கொண்டு
சூழ்ந்தவனமீதினிலாடிவியந்துதுதித்தாரே. (௨௮)

மம்மர்தெளிந்தனனென்னையிவ்வாறுவயங்கண்டோர்
னம்பிவன்சிவனென்றுதெளிந்தனைப்பாலும்
விம்முபராயவமேவலினுற்சமாமேற்கொண்டான்
றம்மைவளாம்திடுதரினவதானைதனைச்சாய்த்தே. (௨௯)

அன்றவரத்தைஅறிந்தவராயயிலார்கோட்டி
னென்றையொடித்தெதிருய்த்திடலுமஃதோய்யென்றே
சென்றவன்மார்புகிழித்துயிர்நீக்குபுதீதோவத்
துன்றுநன்னீர்க்கடறோய்ந்ததுமீண்டதுதுண்ணென்ற (௩0)

அன்னுவலத்துலனங்கர்மேலவமைத்தாரே
யெண்ணலவர்க்கண்ணகம்பதமின்னுமொழிற்றுனு
மண்ணினடர்த்தவர்மைந்தர்தமக்கிதுவாயாதோ
கண்ணும்வயத்தொழிலென்னவுரைத்திடனுடாதே (௩௧)

புண்ணியர்மீதினிலைந்தருவின்றிபூவாலே
யெணணருமாமழைபெய்தனர்வானவரெல்லோரும்
பண்ணுடனுன்மற்றமாமுனிவோர்கள்பகர்ந்தோராய்த்
தண்ணருளார்சரணங்களிறைஞ்சபுதாநின்றார். [௩௨

மேருபருப்பதமென்னவிழுந்துயிர்வீடுற்றான்
கோரமிருந்திவெட்டமதாயகொடுங்கண்ணுந்
தாரணியெண்டிசைசார்ந்துயுலாவிதொழ்வாரு
மோரிருவாய்க்கடைமீதின்வளைந்திடுமொண்பல்லும். [௩௩]

நேசமிறைந் திருள்காட்டு *சிரோந்தமதின்சேர்ப்பு
மாசமளாவியநாடுமெழுத்திடுமாவென்னும்
வேஷமதாயசரங்களைவீட்டுவிற்றற்சாலும்
வாகைவல்லார்முகமும்முளமுமடிகமாய்க்கத்தான் (௩௪)
கண்டுவெருக்கொடுவானவர்தம்மிருகண்மூடிக்
கொண்டுதிசைத்தலையோடியொளித்திடுகோரத்தா
னண்டமடங்கலும்வீழ்த்திடுவேனெனவப்போது
மண்டலமுண்டுபெறித்தமர்வானெதிர்வந்தானே. ௩௫

நேருறமொருவினுக்கழுமுடைந்துநில்லாதோடக்
காருமெரியக்கடலாகியநாயகர்கையாலே
யேருமமோறுபிடித்ததன்வென்னிடையேயேறி
யாரும்வியந்திடவண்டமெலாம்வலமாமாறே. (௩௬)

ஓடியுலாவநடந்தினரத்தலையுற்றெய்த
நீடியஞானமடைந்ததுமற்றதினின்றோரைக்
கூடியமாதவர்வானவர்பூதர்கள்கொண்டாடி
யாடினர்பாடினரன்னவர்யாருமருச்சித்தார். (௩௭]

பூதர்கடேவர்களோடவணின்றுபுறப்பட்டே
யோதநெடுங்கடல்போலநடந்தனரொல்லென்றே
யேதமகற்றிடுமுத்தரதிக்கினிலேகுங்கான்
மாதவர்வாழ்தருபாடலமாவனம்வந்தாரே. [௩௮)

கற்பகநேர்தருநீழலிலேறுடோர்கயந்தோன்ற
வற்புதமேயபிருங்கிருடன்முதலாரோடுஞ்
சிற்பரஞானசொரூபகணேசர்செறிந்தெய்தி
யுற்றவராச்சிரமங்கடவிர்ந்திடவுன்னுற்றே. (௩௯)

ஆகுவினீங்கினராகியமர்ந்தனரக்காலைக்
கோகனகங்கண்மலர்ந்தகயத்துறுகோட்டின்கண்
பாகமிகுந்திடுபக்குவமேவியபண்பாளர்
யோகியருள்ளமுமாகயிலாயமுமொப்பாகி. [௪௰]

வேனிலைமுன்னாகியகாலமெலாமவண்வேறின்றித்
தாணிளவேனிலெனப்பொலிநீழலதன்னூடே
சேணைகள்காணவிருங்கும்விமானமிசைச்சேர்ந்தே
யேனையரும்புடைசூழ்ந்தினிதேத்தவிருந்தாரே. [௪௧)

கயமுகசம்மாரப்படல முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௨௩௧.

---

*சிரோந்தம் - மயிர்ச்செறிவு.

## கணபதீச்சரப்படலம்.

மெய்யாகியவேழமாமுகத், தும்பராவயித்தின்றமாலிங்கத்
தையருச்சனைதகச்செய்தேத்திய, செய்யவுத்தமைசெப்பக்கேண்மினே. (௧)

ஆங்குமேவியவைங்கைபொன்றையார், தேங்குமாபுகழ்த்தேவமானனீத்
தோங்குஞாலமீதுற்றிறங்கியே, பாங்குமேயவைபார்த்துலாவினர். [௨]

ஓதமார்கயத்துத்தரத்தினிற், றீதக்றபாதிரிநிழற்கண்ணோர்
மாதவத்துநன்மாலிங்கத்தினைக், காதன்மீக்கொளக்கண்ணிற்கண்டனர். (௩)

அற்புதங்கொளீஇயருகுமேவுபு, சொற்பதங்கடந்தூயசோதியாஞ்
சிற்பரத்தினைச்சேவித்துச்சுலாய், நிற்பதாயினர்நெடிதுநேரம்பின் [௪]

கம்புலாமலர்வாவிமூழ்கியே, நம்புவெண்டுகிலவெண்மீதுடீஇப்
பம்புநீற்றினைப்பலகண்மணியொடுஞ், சம்புநாமத்தாற்றகத்தரித்தனர். (௫)

பொருந்துநற்றவப்புனிதமேவிய, விருஞ்சீரீடனைப்பெரிதியானையு
மொருங்களித்திடவொப்பிலார்தம்முன், னிருந்துபூசனையியற்றினாரரோ. (௬)

காழ்ந்தநெஞ்சினோர்காணொணாதநா, யாழ்ந்தமாமறையந்தனையோதியே
சூழ்ந்துபற்பலதோத்திரஞ்சொலீஇத், தாழ்ந்தெழுந்துநற்சானமாற்றியே. (௭)

எம்பிரான்முனமிருக்குமேல்லாவயி, லும்பராதியோரொருங்குகாணுற
நம்புமாகயிலாயநண்ணிற்று, லம்பரென்னவேயாயதாயிடை. (௮)

வேறு.

கோடிசூரியரேயென்னக்கூறுதற்காயமெய்யி
லாடகத்தாயவாடையற்புதமமையச்சூழ்ந்தே
யீடிலாவெண்ணான்கெனுமிலக்கணமுழுதும்வாய்ந்த
பாடமைபீரெட்டாயபருவமிக்குடையோராகி. (௯)

கோதில்பன்மணியாலாயகுழைகளுங்குலவுகாந்தி
தீதிலெண்டிசையும்வீசித்திகழுமோலியுமசாணிச்
சேர்ந்தமாலையுநற்றங்க ணமுங்கொளிசிலம்புந்தூய்மை
யோதிடற்கரியமற்றமுறுப்புகளெலாந்தரித்தே. (௰)

அந்தமார்வீறாரனத்தமைதிலதமுமணிந்து
சந்தனம்பனிநீர்மிக்கச்சவ்வாதுபுழுகுந்தாங்கிச்
சுந்தரமலர்ப்பூமாலைகள்சுகந்தம்வீசுறமாசூடி
மந்தகாசத்தினோடுமணக்கோலமருவினோராய். (௧௧)

இபங்கள்பற்பலவியப்பவெண்ணிலர்வாழ்த்துமல்கச்
சயந்தருமுமையாளோடெந்தைம் திமிலேந்தவெம்மா
னயந்தவர்க்கருளுவோராய்நால்வாயைங்கரத்தோய்பர்
வியந்திடவிலிங்கநின்றம்விழிவிருந்தாவுர்துற்றார். (கஉ)

ஆத்தனையாத்தியோமெம்புமீதுறக்காணூஉ
வேத்தருஉமின்பவாரியிடையினிற்படிந்தோராகிச்
சாத்திரமுறைத்தற்கொண்ணுச்சமரசமுதலேயென்னத்
தோத்திரித்தஞ்சலித்துத்தொழுதுமுன்னின்றுசொல்வார். [கங]

பண்டையில்விளைபவாறேபகருமணக்கோலத்தைத்
கண்டனனிறையுமாறுகடைக்கணித்தருள்கவென்ன
வீண்டைவார்சடையெம்மானுமிடங்கொளேந்தாயுமுள்ளங்
கொண்டயாவையுமீண்டேநீகூறுகதொடுத்துமென்றார். [கச]

சுத்தமங்களமெக்காலுந்தோயுங்கேத்திரங்கட்கெல்லா
முத்தமோத்தமமாமீண்டேயிவக்குமிக்கோலந்தோலி
நித்தமுமுறைநல்வேண்டுநிலவுகைலாபதின்று
மித்தலம்போந்ததாலுமிம்மணந்தருதலாலும். (கரு)

சயிலாயநாதரென்றுங்கருணையேயுருவமாகு
மியலருமன்னையார்கல்லியாணசுந்தரியரென்றும்
பெயரோராயமர்ந்துநம்மைப்பேணிவந்தடைந்தோர்தங்கண்
மயர்நீருமனத்தினெண்ணும்வளனெலாம்வழங்கல்வேண்டும். [கசு]

திருந்தகுகயிலைபோலித்தேமெலாந்திகழ்தல்வேண்டுங்
குருகொள்வானமுநிழற்றிக்குலவுபாடலமாமிந்த
விருக்கம்பல்லூழிசாலம்வீடாதுமேவல்வேண்டுங்
கருத்துறுமிததீர்த்தத்தைக்கல்லியாணமென்னல்வேண்டும். [கஎ]

அருத்திமிக்குடையராகியகம்புறந்தூயராகிக்
கருத்தினைச்செழுத்துமெண்ணிக்கண்டிகையாரம்பூண்டு
திருத்திமாதவர்கட்காற்றித்தென்புலக்கடன்களியாவும்
விருத்தியினியற்றிமூழ்கின்விரிகங்கைப்பலனேவேண்டும். [கஅ

வாவியின்னீராலாட்டிவகைவகையுணக்களூட்டிக்
கூவிளமதனுண்மிக்ககோழமைகுங்குமத்தாம்
ஞாலிலாமனுநூற்றெட்டுசகத்திரங்கொண்டர்ச்சிப்போர்
சீவிரமிகச்சேருமீடுத்திறப்பேறுமேவல்வேண்டும். [கக]

கங்கையினன்னீராலே சனிவுமிக்காட்டுவிப்போர்
பங்கமில்லாப்பல்லூழிபார்முழுதாளவேண்டும்
புங்கமார்கவேரமன்னன்புத்திரியாற்றுனீரா
லுவகையிபிட்டிப்போருபாசெல்வத்துறுதல்வேண்டும். ௨௦

பொன்னைமிக்கவாவினலும் புவியைமிக்கவாவினலும்
மின்னைமிக்கவாவினலுமேதவுடையகல்வி
தன்னைமிக்கவாவினலுந் தவச்சிவஞானப்பேற்
றினைமிக்கவாவினலுமிங்குபெறவரிதல்வேண்டும். ௨௧

இத்தலையகலாதியானுமிருந்திடல்வேண்டுமென்னு
மத்தரித்தலமெக்காலுங்கடகசங்கணித்ததுன்றவ
சித்தம்போலரிதேமென்றுசெப்பித்தைசனீந்தாராகி
யுத்தமவுறைகெனகென்றேயுவர்தமுறைவதானுர். ௨௨

வானவரியாருஞ்சூழ்ந்துமாமுகத்தேவைவாழ்த்தி
யீனமார்கயாசூரன்முன்னியற்ற்றட்டணமேயாதி
யானவவ்வணக்கமியாவுமையவுனறனக்குநாறு
மானமிக்கவைபச்செய்வோமகிழ்ந்தருள்புரிகவின்னும். ௨௩

இவ்வகைவணக்கந்தன்னையாவரேயெனினுஞ்செய்யி
னவ்வவர்கருதினுடையமைத்திநிகருமமெலாஞ்
செவ்வையினியலுமாறேதிருவருள்புரிகவென்ன
வெவ்வமிலவ்வாறாகவெனவிடையியம்பினரே. ௨௪

அன்றுதொட்டின்றுகாறுமத்தலங்கடகமென்று
நன்றுசெய்வார்கைலாயநாதனுமென்றும்பாகந்
துன்றமையாள்கல்விபாணசுந்தரியென்றுமென்றுங்
கன்றுதலிலாததீர்த்தங்கல்விபாணமென்றுஞ்சொல்வார். ௨௫

ஆபதாற்கேத்திரங்களானயாவைக்குமைதே
தாயினையனையதாருந்தக்கநற்காந்தந்தன்னின்
மீயுயர்சைவசாரமேன்மேலுமிதைவிதக்கு
நீயிரோர்மினகவென்றேநிகழ்த்தினன்சூதமேலோன். ௨௬

செங்கரஞ்சிரமேற்கூப்பிச்சிவாணந்தவாரிமேன்மேற்
பொங்கமற்றதனின்மூழ்கிப்புளகமுற்றோர்களாகிச்
சங்கையில்லாதிவ்வாறுசாற்றிடவல்லாரியாரே
யெங்கண்மகவேயென்றேயின்புற்றுமொழிந்தார்மற்றும். ௨௭

திருக்கணபதீச்சரமென்னச்சகைகொட்டக்குடிக்குராம
மிருப்பதுமென்னையென்றிவைநியமுன்னோர்கற்பு
துருப்பமார்கயமுகற்காய்வுற்றுமீட்டருங்காலத்தி
லிருச்சனையிவ்விவரம்பராற்றலாலமைந்ததென்றார். (௨௮)

கடந்தனைவமர்ந்தோர்தேத்துகடக்குமோவெனவினவக்
கடந்திடுகற்பக்கோறுங்கண்ணுநலருளினாற்பல்
லிடந்தொறுமிருைம்பூதெய்தவியன்றதுமற்றோர்தேத்து
மடைந்திடுமவையுட்சிலவுவன்புற்றக்கேண்மினென்றே. (௨௯)

மாலவன்மலைப்பாம்பாகிவடாதுதிபந்துநின்ற
வாலமர்பொந்திறுடையமர்ந்தானோர்கற்பந்தன்னி
லாலயம்மாலப்பாம்பாய்கிலவுமித்தலத்திறுடு
மேலவோர்கறபந்தன்னினெயதியிக்கிருந்தானின்றும் (௩0)

காலனைமுன்றானந்தகானத்துங்கடவூர்க்கணு
மாலமாகண்டஅதெந்தைநிமிர்ந்ததுமனங்கன்றன்னைச்
சீலமாகைலாயத்தில்திருக்குறுக்கையினிடத்தும்
பாலலோசனத்தானீறுபடுத்ததும்பயலுமின்றும். (௩௧)

புண்ணியமருகற்கண்ணுமபுறம்பியத்திட்டதுங்காழி
பண்ணைலார்விடந்தீர்த்திட்டவற்புதமவிருமின்று
மெண்ணுகூடலினிடத்துமிலங்குபுள்ளேரிடத்தும்
விண்ணரானிசாபம்வீந்ததுவிளங்குமென்றார்.

ஆசங்கையகற்றவோரிலையைத்தன்னைப்போல
வீசுதெண்டிரைமுன்னீர்சூழ்மேதினியிடத்திபாரே.
பேசரவல்லாரெனநீபெருமகிழ்வுற்றோராகி
நேசமுமின்புமேன்மேனிறைபுறச்சொண்டிறாரே. (௩௨)

கணபதீச்சரப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௨௩௨.

---

# இலக்குமிநாதபுரப்படலம்,

தலத்தினிலுயரந்தத்தானந்தனையின்னு
மிலக்குமிநாதபுரமென்னவோரபிதானஞ்
சொலப்படுமதன்சிறுஞ்சொற்றிடக்கேண்மினென்று
மலக்குறும்பொருங்கோவம்மாதவமுனிசொல்வான். (௧

உமைபொருண்மையென்று ... ருச்சிலையா
லெமைமகிழ்வாக்கிபதாலெண்ணிமதெண்ணியவை
யமைவுறச்செண்டுமேலார்தருதிதுமென
விமையவருமகிழவின்னவைகேட்டனால். [கஅ]

நலந்திகழிலுபரிங்கேசநூறல்வேண்டுமினைத்
திலக்குமிநகபுரமென்றிடல்வேண்டுமென
வலந்தருதப்போற்றுபவர்க்கறமுதலோர்நான்கும்
யுலந்துறாகலகொடநல்வரமதுவும்வேண்டுமென. [ககூ]

உறுதவிறைவின்வணமுதலினைந்தர்த்த
தெறுதிடையேவிழைச்சிதவிபூசுதவியெனு
மினர்களொடும்மேவிவேட்டனர்வேட்டவெலா
நீறுதவிநோாகோசதுறையாவென்றா. (உ0)

பூதியிறலணியும்புண்ணியமாமுதல்வ
ரோதியவவையெல்லாமுவனைநீன்மிக்கேற்றே
மாதவனதலைவயவாழ்வாமெனவிளன்றுலை
வேதமறைநோதும்விதகரேயென்றான். [உக]

இலக்குமிநகபுரப்படலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் உஅக.

## குபேரன் பூசித்தபடலம்.

புண்ணியவடாதுபுலத்தளகையினைப்புரக்குமன்பூசனைபுரிந்து
திண்ணியமணியாற்செங்கனகத்தாற்சிவபிரான்சிந்தரன்முதலா
வெண்ணியபலர்க்குந்தளிகணன்கமைத்திட்டற்புதவிழாக்கருமியற்றி
யெண்ணியபுட்பகமுங்கொண்டகாதையிருந்தவைச்சூரனன்கியம்பும் (க)

புனிதமாதவத்தின்றன்னுருப்புரைபப்பொலிதருதிருக்கைலையினிற்
பனிமலைதவத்திற்பயந்தபார்ப்பதியார்பரசிவப்பிரானடிபணிந்தே
யினியபூவுலகிலெண்ணில்கேதிரத்தினேற்றமிக்கமைந்தவையெலாங்
கனிபரிவசெய்கவென்னவாய்மலர்ந்தன்கெடுத்தியம்புவதானார். (உ)

ஆனந்தகானந்தென்றெத்திராமேசமாதியகேத்திரமதனிற்
றனகற்றீர்த்தமூர்த்திமூன்றுந்தகைமைசான்றவையெலாஞ்சால
மூனமிக்கமையவுரைதருளினானமகிழ்ச்சியிற்கேட்டவணுறைந்த
வானவரியாரும்விடைகொடுசெலுங்கால்வடபுலத்தளகையாண்மன்னன். (ங

மப்புகின்றுத்தமாங்கமிமிசையினிருந்தாழுங்குவித்தேத்திக்
காருளிங்கனத்தோயடிமையேன்புட்பகத்தனையிலங்கைகாவலன்றன்
பூரலாமறிபக்கவர்ந்தனன்சென்றுவம்பரம்பரவஃதருளெனலு
மேறுலாங்கிதன்பாடலபுரமெய்திமெய்ம்மைமரீயருச்சனையியற்றின். (௪)

ஆங்கெழுந்தருளியளிக்குதமெனலுமன்னவனவ்வழியகல்வுற்
றோங்குபாடலமாபுரத்தினையெய்தியொப்புபர்வதல்பூசிவத்தைத்
தேங்கியவிருப்பிற்கண்டுதாழ்ந்தெழுந்துசிவாகமவிதிதவறாது
பூங்கழல்வழுத்திப்புளகமுற்றவனுப்புகலருமானந்தம்பொங்க. [௫]

மணச்சிறப்பருளுங்கைலைநாயகனைமருங்கினிலினிதுறைந்தருளுய
தூணப்பொருப்பாங்கல்லியாணசுந்தரியைக்குஞ்சரமுகத்திறையவனை
வணக்கடம்பலங்கன்மலிபுயத்திறையைமணத்தழாயணியுமாதவனை
யெணத்தகுமற்றையோரையும்பூசிதத்தின்புற்றுப்பலபகலிருந்தான். (௬)

அன்னகாலையிலன்னவரியார்க்குமாடகத்தருமணியழுத்தி
மின்னொளிவீசுந்திருத்தளிசேர்றுவேறுவானளவிவானேங்க
நன்னயமமைகோணறச்சராவியற்றிநண்ணுறமிடபநன்மதியின்
மன்னுபஞ்சமியில்விடைக்கொடியேற்றிமகிழ்வொடும்விழாப்பலவியற்றி. (௭)

அணிகொள்வைசாகநாளும்பூரணையுமமைந்திடுமுற்பக்கமதனின்
மணியிரதம்மூவிழாவனைவருகருமகிழ்ச்சிமேன்மேலுறவியற்றித்
துணிவறத்தீர்த்தந்தருவதாப்புரிந்துதவாநிசதியமுதல்சமைத்திட்
டணியதுகொள்ளத்தாழ்ந்துமுன்னெழுந்தேயிருந்துதியம்புவதானன். (௮)

ஆரணமுதலேயகிலகாரணனேயானந்தவாரியின்னமுதே
சீரணிவியவேரம்பாசேவிக்கத்திருமணங்காட்டியசிவமே
நாரணன்முதலோர்க்கரியநாயகமேநலமெலாநண்ணினோர்க்கருளுங்
காரணகுருவேகடகமாநகர்க்கைலாயநாதனேபோற்றி. (௯)

ஓத்தற்பதங்கடந்ததூயமெய்ஞ்ஞானசொரூபமாய்த்தோன்றியசுயம்பே
யத்தயகமுடையோரறிவினிற்றோன்றுமானந்தமாப்பெருங்கடலே
தற்பரமேயென்னடியவரியார்க்குந்தவாவளந்தருதயாநிதியே
கற்பகமேதிக்கடகமாநகர்க்கைலாயநாதனேபோற்றி. (௧௦)

அனேககல்யாணசுந்தராம்பிகையாரமரிடப்பாகநல்லரசே
பனகபூடணனேபரம்பரப்பொருளேபரசிவமேபசுபதியே
முனைகடீத்தவரைப்புரந்தருளளிக்குமூத்தனேமுழுமுதற்பொருளே
சினகமாழுதில்சூழ்கடகமாநகரக்கைலாயநாதனேசரணம். [௧௧]

அமலனேசரணமனகனேசரணமானந்தசொரூபனேசரணம்
விமலனேசரணம்விகிர்தனேசரணம்விண்ணவர்தலைவனேசரண
நிமலனேசரணநிருத்தனேசரணநிராமயநிரஞ்சனேசரணங்
கமலவாவிகள்சூழ்கடகமாநகர்க்கைலாயநாதனேசரணம். [௧௨]

எனத்துதியியம்பிமுன்னின்றவன்முன்னெம்பிரானுமெழுந்தருளி
யனைத்துடனிபம்புந்துதியெலாமிகவுமகிழ்ந்தனனகைலையிற்சேட்ட
வினைத்துமிக்குயருப்புட்பகமீந்தோமென்றிறையருளிதிடலுந்
தனைத்துமேலோங்குமளகைமன்னவனுந்தாங்கருமகிழ்ச்சியிற்பெற்றான். [௧௩]

பெற்றனனாகிப்பெருவளமியாவும்பிறங்குதன்னளகையிற்சென்று
சுற்றமோடமர்ந்தானெனச்சிவானந்தஞ்சொட்டிடச்சொட்டிடத்தூய
நற்றவமிகுத்தநைமிசவனத்துநண்ணியமுனிவரர்க்குரைத்தான்
பற்றலில்லாமுனிவர்கள்புகழுமாதவச்சூதமாமுனியே. (௧௪)

குபேரன்பூசித்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௨௧௭.

# நைமிசமுனிவர் பூசித்தபடலம்.

சூதமாமுனிவனுரைத்தவையாவுஞ்சுகானந்தமேலுறக்கேட்டு
மோதமேன்மேலுமுடையவராகிமுன்னியத்தலைத்தொடர்ந்துற்ற
மேதகன்கமைப்பூரணஞ்செய்துவிசேடமங்குளார்க்கெலாமியற்றி
யாதரம்பெருகப்பாடலநகருற்றமலனைப்பூசிப்பானெழுந்தார். (௧)

அன்னமாமுனியோடவ்வனமகன்றேயடுத்தபல்வனங்களுமலையு
நன்னதிகளும்பின்னாகமுன்னடந்துநாட்டினியவூர்ந்தசோணாடு
தன்னகமெய்திச்சிவாவருட்பேறுதரும்பலதலங்களும்பணிந்து
பொன்னாடர்புகழ்க்கவிளங்குபாடலமாபுரத்தினையடைந்தனரன்றே. (௨)

பலன்செயோரையிற்கல்வியாணைநீராடிப்பானிறநீற்றினைப்புனைந்து
கலன்பொருவுங்கண்ணியமணித்தொடைபுனைந்துகருத்திலைந்தெழுத்தினைக்க
யிலுங்குறவிரண்டுகரங்களுஞ்சிரமேலேறிடத்தொழுதவராகி [ணிதமே
வலங்கொடுபலகால்வாயெலாமினிக்கமாதேவவெனுமுழக்கெழுப்பி.

## [illegible]முனிவர் [illegible] சிதம்பரம்.

[illegible]மூடிக்கும்வேழத்தைய்ப்பா[illegible]
[illegible]யடியார்க்கருளுங்கைலாயநா[illegible]
[illegible]யவருட்கல்வியாணசுந்தரியையடியிணை[illegible]
[illegible]யணியிற்பொலிதருஞ்செவ்வேண்மலர்[illegible]

நடம்பயிலரசி[illegible]சந்நிதியடைந்தநாயகரையுமுன்னுய்ய
தொடங்கியுடம்பைக்கைவிடாதுகண்டெங்குஞ்சுந்தரியி[illegible]யுந்தொழுது
குடம்பமுலையின்னிருவரோடுமறையுங்குடமெமாலையுந்தொழுதே
[illegible]மற்றுள்ளாரியாரையுந்தொழுதேயனப்பருந்துதியன்போடுரைப்பர். ()

### வேறு.

மணிச்சடைமீதுகொன்றைமலர்த்தொடைதரிப்பாய்போற்றி
தணிப்பருஞ்சடாமாமேனிச்சச்சிதானந்தாபோற்றி
யெணிறந்திப்பவர்களிற்கருமெண்ணியவருள்வாய்போற்றி
கணிப்பொழில்சூழ்கடகைலாயநாதாபோற்றி. (௧)

மங்கையோர்பாகாபோற்றிமறைப்பரியுகைப்பாய்போற்றி
யங்கைமான்மழுவாய்போற்றியம்பலநடராசேபோற்றி
செங்கையினடத்தாய்போற்றிசிவபெருமானேபோற்றி
கங்கைவாசசடையாயபோற்றிகைலாயநாதாபோற்றி. (௨)

மடக்கொடிபாகாபோற்றிமறைமுதற்பொருளேபோற்றி
யுடற்குயிரானாய்போற்றியும்பாகட்கரசேபோற்றி
விடற்கரியவனேபோற்றிமேவினோர்க்கருள்வாய்போற்றி
கடக்கமாநகராய்போற்றிகைலாயநாதாபோற்றி. (௩)

அத்தனேபோற்றிபோற்றியமலனேபோற்றிபோற்றி
நித்தனேபோற்றிபோற்றிநின்மலாபோற்றிபோற்றி
முத்தனேபோற்றிபோற்றிமுதல்வனேபோற்றிபோற்றி
கத்தனேபோற்றிபோற்றிகைலாயபோற்றிபோற்றி. (௪)

### வேறு.

செய்தவமுனிவரானத்தவருவிதேங்குறத்துதிபலசெய்து
மெய்ம்மயிர்சிலிர்ப்பவிந்ர்வி திர்ப்பெய்திவினைத்புவாழ்வினைமேவி
[illegible]கையளிக்குமூர்த்திமுன்மூன்றுமுற்றதெத்தலத்தினுமிக்கதே
[illegible]மனத்திலென்னணினராகியளப்பறுநாளிவணமர்ந்தார். (௰)

...ப்பலசுகத்திடைப்படிந்தே
...புறமச்சிவபதத்திருப்பார்
...யாதர்செந்தமிழைச்
...தனைசெயுந்திறத்தினரே.

...வாழ்க
...கல்லியாணசுந்தராம்பிகையார்வாழ்க
...ணம்வாழ்கத்தழைத்தபுன்காலிவாழ்க
...டையார்வாழ்கத்திண்புலிவாழ்கவாழ்க.

நைமிசமுனிவர் பூசித்த...லமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் [illegible].

---

திருக்கடகப்புராண
முற்றிற்று